ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 8.6 – தொண்டீர்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 8.6 – தொண்டீர்

‡ தொண்டீர் ! உய்யும் வகை கண்டேன் ⋆
துளங்கா அரக்கர் துளங்க ⋆
முன் திண் தோள் நிமிரச் சிலை வளையச் ⋆
சிறிதே முனிந்த திருமார்பன் ⋆
வண்டார் கூந்தல் மலர் மங்கை ⋆
வடிக் கண் மடந்தை மான் நோக்கம் கண்டான் ⋆
கண்டு கொண்டுகந்த ⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே ‖ **8.6.1** ‖

பொருந்தா அரக்கர் வெஞ்சமத்துப் ⋆
பொன்ற அன்று புள் ஊர்ந்து ⋆
பெருந்தோள் மாலி தலை புரளப் ⋆
பேர்ந்த அரக்கர் தென் இலங்கை ⋆
இருந்தார் தம்மை உடன் கொண்டு ⋆
அங்கெழில் ஆர் பிலத்துப் புக்கொளிப்ப ⋆
கருந்தாள் சிலைகைக் கொண்டான் ஊர் ⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே ‖ **8.6.2** ‖

வல்லி இடையாள் பொருட்டாக ⋆
மதிள் நீர் இலங்கையார் கோவை ⋆
அல்லல் செய்து வெஞ்சமத்துள் ⋆
ஆற்றல் மிகுத்த ஆற்றலான் ⋆
வல் ஆள் அரக்கர் குலப்பாவை வாட ⋆

முனி தன் வேள்வியைக் ⋆
கல்விச் சிலையால் காத்தான் ஊர் ⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே ‖ **8.6.3** ‖

மல்லை முந்நீர் அதர் பட ⋆
வரி வெஞ்சிலை கால் வளைவித்து ⋆
கொல்லை விலங்கு பணி செய்யக் ⋆
கொடியோன் இலங்கை புகல் உற்று ⋆
தொல்லை மரங்கள் புகப் பெய்து ⋆
துவலை நிமிர்ந்து வான் அணவ ⋆
கல்லால் கடலை அடைத்தான் ஊர் ⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே ‖ **8.6.4** ‖

ஆமை ஆகி அரி ஆகி ⋆
அன்னம் ஆகி ⋆
அந்தணர் தம் ஓமம் ஆகி ஊழி ஆகி ⋆
உலகு சூழ்ந்த நெடும் புணரி ⋆
சேம மதிள் சூழ் இலங்கைக்கோன் ⋆
சிரமும் கரமும் துணித்து ⋆
முன் காமற் பயந்தான் கருதும் ஊர் ⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே ‖ **8.6.5** ‖

வருந்தாதிரு நீ மட நெஞ்சே ⋆
நம் மேல் வினைகள் வாரா ⋆
முன் திருந்தா அரக்கர் தென் இலங்கை ⋆
செந்தீ உண்ணச் சிவந்தொருநாள் ⋆
பெருந்தோள் வாணற்கருள் புரிந்து ⋆
பின்னை மணாளன் ஆகி ⋆

முன் கருந்தாள் களிறொன்றொசித்தான் ஊர் ⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே ‖ **8.6.6** ‖

இலை ஆர் மலர்ப் பூம் பொய்கை வாய் ⋆
முதலை தன்னால் அடர்ப்புண்டு ⋆
கொலை ஆர் வேழம் நடுக்குற்றுக் குலைய ⋆
அதனுக்கருள் புரிந்தான் ⋆
அலை நீர் இலங்கைத் தசக்கிரீவற்கு ⋆
இளையோற்கரசை அருளி ⋆
முன் கலைமாச் சிலையால் எய்தான் ஊர் ⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே ‖ **8.6.7** ‖

மால் ஆய் மனமே ! அருந்துயரில் ⋆
வருந்தாதிரு நீ ⋆
வலி மிக்க கால் ஆர் மருதும் காய் சினத்த கழுதும் ⋆
கதமாக் கழுதையும் ⋆
மால் ஆர் விடையும் மத கரியும் ⋆
மல்லர் உயிரும் மடிவித்து ⋆
காலால் சகடம் பாய்ந்தான் ஊர் ⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே ‖ **8.6.8** ‖

குன்றால் மாரி பழுதாக்கிக் ⋆
கொடி ஏர் இடையாள் பொருட்டாக ⋆
வன்தாள் விடை ஏழ் அன்றடர்த்த ⋆
வானோர் பெருமான் மா மாயன் ⋆
சென்றான் தூது பஞ்சவர்க்காய் ⋆
திரி காற் சகடம் சினம் அழித்து ⋆

கன்றால் விளங்காய் எறிந்தான் ஊர் ⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே ‖ **8.6.9** ‖

‡ கருமா முகில் தோய் நெடு மாடக் ⋆
கண்ணபுரத்தெம் அடிகளை ⋆
திருமா மகளால் அருள்மாரி ⋆
செழு நீர் ஆலி வள நாடன் ⋆
மருவார் புயற் கைக் கலிகன்றி ⋆
மங்கை வேந்தன் ஒலி வல்லார் ⋆
இருமா நிலத்துக்கரசாகி ⋆
இமையோர் இறைஞ்ச வாழ்வாரே ‖ **8.6.10** ‖

அடிவரவு — தொண்டீர் பொருந்தா வல்லி மல்லை ஆமை வருந்தாது இலை மால் குன்றால் கருமா வியம்

தொண்டீர் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்